குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சிசி.எண். 112/2020

அ.சா.4

2025–ம் ஆண்டு மார்ச் 18ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கவின் | தொழில் | |
| தந்தை பெயர் | கிருஷ்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.23 மணி,

Accused Gnanasekar present. Advocate Mr.T.Ranganathan Present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பாரப்பட்டியில் குடியிருந்து கொண்டு ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருங்களுக்கு முன்பு மாலை 06.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது தங்கதுரை எனக்கு போன் செய்து எனது நண்பர் மாயக்கண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாகவும் உடனடியாக வரச்சொன்னதின் பேரில் ஓமலூர் டூ மேச்சேரி சாலையில் சௌத்திந்தியன் பள்ளி அருகே சென்று போய் பார்த்த போது மாயக்கண்ணன் இடுப்பில் பேருந்தின் சக்கரம் ஏறி இறந்து கிடந்தார்.

2. நான் மாயக்கண்ணனின் தந்தை கோவிந்தனுக்கு தகவல் சொன்னேன். அவரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்ததார். நானும் தங்கதுரையும் மாயக்கண்ணனை மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். மாயக்கண்ணன் இருசக்கர வாகனத்தில் சென்ற போது பேருந்தின் முன் சக்கரம் அவரின் மீது ஏறி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 24.02.2019 ம் தேதி 18.30 மணியளவில் மாயக்கண்ணன் என்பவர் TN 30 BV 6141 என்ற பதிவெண் கொண்ட ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் ஓமலூர் டூ மேச்சேரி சாலையில் நச்சுவாயன்பிரிவு சாலை சௌத்திந்தியன் பள்ளி அருகே மேச்சேரி நோக்கி சென்ற போது அதே சாலையில் அவருக்கு பின்னால் ஆஜர் எதிரி TN 30 N 1042 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கரதையாகவும் ஓட்டி சென்று மாயக்கண்ணனின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்து விட்டு விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. தங்கதுரை என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் கூறி தான் வழக்கு விபத்து பற்றி எனக்கு தெரியும் என்றால் சரி. அதன் பின்பு தான் சம்பவ இடம் வந்து பார்த்தேன் என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.31 மணி**

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.